# முதலாம் பகுதி

## நிறுத்தலளவையும் முகத்தலளவையும்

### மாற்றற் காரணிகள்

**பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகுகட்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏக்கர் | = | 0.405 எக்டேயர்கள் (எ. டே) |
| 1 | இறுத்தல் (இரு) | = | 0.454 கிலோ கிறும்கள் (கி.கி.) |
| 1 | லோங் தொன் (2,240 இரு) | = | 1.016 மெற்றிக் தொன்கள் (மெ தொ.) |
| 1 | அந்தர் (112 இரு) | = | 50.802 கி. கி. |
| 1 | மைல் | = | 1.609 கிலோ மீற்றர்கள் (கி. மீற்) |
| 1 | லோங் தொன் மைல் | = | 1.635 மெ. தொன் கி. மீ. |
| 1 | இரு / ஏக்கரிற்கு | = | 1.121 கி. கி. / எ. டே. |
| 1 | அந்தர் / ஏக்கரிற்கு | = | 125.536 கி.கி. / எ. டே. |
| 1 | பைந்து | = | 0.57 லிற்றர்கள் |
| 1 | இம்பீரியல் கலன் | = | 4.55 லிற்றர்கள் |

**மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகுகட்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 | எக்டேயர் | = | 2.471 ஏக்கர்கள் |
| 1 | கிலோகிறும் | = | 2.205 இறுத்தல்கள் |
| 1 | மெற்றிக்தொன் (1,000 கி.கி) | = | 0.984 லோங் தொன் |
| 1 | மீற்றர் | = | 3.281 அடி |
| 1 | கிலோமீற்றர் | = | 0.621 மைல் |
| 1 | மெற்றிக் தொன் கிலோமீற்றர் | = | 0.612 லோங் தொன் மைல் |
| 1 | லிற்றர் | = | 1.76 பைந்துகள் |
| | | = | 0.219 இம்பீரியல் கலன்கள் |
| 1 | கி.கி. / எக்டேயரிற்கு | = | 0.892 இரு / ஏக்கரிற்கு |

**நெல் / அரிசி மாற்றி அமைத்தல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | புசல் (நெல்) (46 இரு) | = | 20.87 கி.கி |
| 1 | மெற்றிக் தொன் நெல் | = | 47.92 புசல்கள் நெல் |
| | | = | 0.7 மெ. தொன் அரிசி |
| 1 | மெற்றிக் தொன் அரிசி | = | 68.46 புசல்கள் நெல் |
| | | = | 1.43 மெ. தொன் நெல் |
| 1 | புசல்நெல் / ஏக்கர் | = | 51.55 கி. கி. நெல்/ எ. டே. |

# 1981 இல் பொருளாதார செயலாற்றம், பிரச்சனைகள், கொள்கைகள்

## அறிமுகம்

1981 இல் இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.8 சதவீதத்தால் அதிகரித்து 1980 இல் அடையப்பெற்ற அதே வளர்ச்சி வீதத்தினை ஒத்திருந்தது. நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1980 இன் ரூ. 195,750 இலட்சத்திலிருந்து 1981 இல் ரூ. 207,060 இலட்சத்திற்கு அதிகரித்துக் காணப்பட்டது. ஆயினும் உண்மையான மொத்தத் தேசிய உற்பத்திக்குச்சமமான காரணி வருவாய்கள் தவிர்ந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு 4.2 சதவீதமாகவே காணப்பட்டது. இதனால் 1981 இல் வட்டி, இலாபம், பங்கிலாபம் போன்ற காரணி வருமானத்தில் ஏற்பட்ட வெளிநாட்டிற்கான பெருமளவு தேறியவெளிப்பாய்ச்சல் மொத்தத்தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை1980 இன் 5.6 சதவீதத்திலிருந்து 1981 இல் 4.2 சதவீதமாகக் குறைவடையச் செய்தது.

1981 காலப்பகுதியில் இலங்கையின் குடித்தொகை 1.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பீடப்பட்டது. குடித்தொகை அதிகரிப்பிற்கு சீராக்கம் செய்ததன் பின்னர் உண்மையான, தலைக்குரிய வருமானம் 2.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இது 1979, 1980 ஆம் ஆண்டுகளில் முறையே ஏற்பட்ட 4.3 சதவீத 3.6 சதவீத தலைக்குரிய வருவாய் வளர்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 5,126 அல்லது ஐ. அ. டொலர்கள் 265 ஆகக் காணப்பட்டது.

அட்டவணை 1.1

தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் 1978—81

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | | வளர்ச்சி வீதம் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1980(அ) | 1981(அ) | 1978 | 1979 | 1980 | 1981 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | 40,479 | 49,782 | 62,246 | 78,506 | 16.7 | 23.0 | 25.0 | 26.1 |
| 2. நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | 17,401 | 18,501 | 19,575 | 20,706 | 8.2 | 6.3 | 5.8 | 5.8 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | 40,242 | 49,542 | 61,814 | 76,831 | 16.9 | 23.1 | 24.8 | 24.3 |
| 4. நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. (ஆ) | 17,329 | 18,430 | 19,456 | 20,268 | 8.8 | 6.4 | 5.6 | 4.2 |
| 5. நடு ஆண்டுக் குடித்தொகை (பத்து இலட்சங்களில்) | 14.2 | 14.5 | 14.7 | 15.0 | 1.8 | 2.0 | 1.8 | 1.7 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. (ரூ) | | | | | | | | |
| (அ) நடைமுறை விலைகளில் | 2,836 | 3,424 | 4,194 | 5,126 | 14.8 | 20.7 | 22.5 | 22.2 |
| (ஆ) நிலையான விலைகளில் (ஆ) | 1,221 | 1,274 | 1,320 | 1,352 | 6.8 | 4.3 | 3.6 | 2.4 |

(அ) தற்காலிகம்
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1980 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1981 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் உறுதியாகக் காணப்பட்டமைக்கு வேளாண்மை, தயாரிப்பு துறைகளின் நன்கமைந்த செயலாற்றமே பெருமளவு துணை நின்றதெனலாம். குறிப்பாக வேளாண்மைத்துறையானது 6.9 சதவீதத்தால் அதிகரித்ததுடன், இது 1980 இல் ஏற்பட்ட வரட்சியினால் உண்டான 3.1 சதவீத வளர்ச்சியிலும் கணிசமானளவில் நன்கமைந்ததாகக் காணப்பட்டது. ஏற்றுமதிப் பதனிடல் துறைக்கு உள்ளீடுகளை வழங்கும் பெருந்தோட்டப் பயிர்களின் திருந்திய செயலாற்றம் காரணமாக தயாரிப்புத்துறையின் வெளியீடு 1980 இனைவிட துரிதமாக அதிகரித்திருந்தது. கைத்தொழிலின் பிறிதோர் முக்கிய பகுதியான ஆடை ஏற்றுமதிக் கைத்தொழில்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க முதன்மைப் பண்பு மிக்கதாய் இருந்தது. எனினும் 1981 இன் முதல் அரைப் பகுதியில் காணப்பட்ட மின்வலுப் பற்றாக்குறை, பெற்றோலிய தூய்மையாக்கி தொழிற்படாதிருந்தமை ஆகிய இரண்டினாலும் 1981 இல் கைத்தொழில்துறை முழுவதினதும் செயலாற்றம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைப்பங்கிற்கு மேல் வகைகூறும் கட்டடவாக்கம், வர்த்தகம், வங்கித்தொழில், ஏனைய பணித்துறைகள் ஆகியன பெருமளவில் குறைந்து காணப்பட்டமைக்கு பணவீக்கத் தாக்கத்தில் குறைப்பை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளும் அரச செலவினத்தில் ஏற்பட்ட பெருமளவு மிதமான வளர்ச்சியுமே காரணங்களாகும். உண்மையில் கட்டடவாக்கத்துறை பாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்திருக்குமென மதிப்பிடப்பட்டது.

1981 இல் பொருளாதாரத்தில் துறைவகைப்படியான செயலாற்றம் பற்றிய பகுப்பாய்வு எடுத்துக்காட்டுவது யாதெனில், வேளாண்மைத்துறையின் குறிப்பாக பெருந்தோட்ட ஏற்றுமதிப்பயிர்களின் திருந்திய செயலாற்றம் வளர்ச்சி வீதத்தினை நிலைப்படுத்துவதில் முக்கியமானதொரு பங்கினைக் கொண்டிருந்தமையேயாகும். மொத்தத்தில் 1980, 1979 இன் முறையே 10.6 சதவீதத்துடனும், 5.7 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் வேளாண்மைத்துறை 1981 இல் வளர்ச்சியின் 35.5 சதவீதத்திற்கு வகைகூறிநின்றது. 1977 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தாராளமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சியான வழிமுறைக்கு பெருந்தோட்டப் பயிர்களின் இன்றியமையாமையை மேலும் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. நன்கு முன்னேறிய செயலாற்றத்தினைக் கொண்டிருந்த இத்துறை, அண்மை ஆண்டுகளில் நெல், உள்நாட்டு பெருந்தோட்டமல்லா வேளாண்மையில் அடையப்பெற்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியால் கணிசமான அளவில் நன்மையடைந்திருப்பதன்மூலம் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் துணைநிற்க முடிந்தது. பெருந்தோட்ட உற்பத்தியின் பதனிடல், கைத்தொழில்துறையின் முக்கியமானதொரு கூறாக விளங்கி வருகின்றமையால் அதன் திருந்திய செயலாற்றத்திற்கு வேளாண்மைத்துறையானது குறிப்பிடத்தக்க பங்கினையும் வழங்கியுள்ளது எனலாம். மேற்கூறப்பட்டவற்றைவிட நாடு அனுபவித்துவந்த பாதகமான வர்த்தக மாற்றுவீத நிலைமையிலும், பெருந்தோட்டப் பயிர்களின் அதிகரித்த உற்பத்தியானது சென்மதி நிலுவையினைப்பெருமளவிற்கு உறுதியான வகையில் வலுவடையச் செய்து, ஏனைய பல துறைகளின் வளர்ச்சிக்கு திடமான வகையில் வலுவடையச்செய்ததுடன், ஏனையபலதுறைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் தாராளமய நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சியான வழிமுறைச்செயலாற்றத்திற்கு உறுதியளித்தும் வந்துள்ளது.

## அட்டவணை 1.2
## காரணிச் செலவு (1970) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி

| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | | | | சென்ற ஆண்டிலும் பார்க்க சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1977 | 1978 | 1979 | 1980 (அ) | 1981 (அ) | 1978 | 1979 | 1980 | 1981 |
| 1. வேளாண்மை. காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 3,732 | 4,299 | 4,532 | 4,622 | 4,766 | 5,097 | 5.4 | 2.0 | 3.1 | 6.9 |
| 2. தயாரிப்பு, சுரங்கத்தொழில், பயன்படுபணிகள் ... | 2,393 | 3,003 | 3,318 | 3,501 | 3,574 | 3,767 | 10.5 | 5.5 | 2.1 | 5.4 |
| 3. கட்டிட வாக்கம் ... | 744 | 619 | 794 | 960 | 1,066 | 1,034 | 28.3 | 20.9 | 11.0 | -3.0 |
| 4. வர்த்தகம், போக்குவரத்து ஏனைய பணிகள் ... | 6,318 | 8,157 | 8,757 | 9,418 | 10,169 | 10,808 | 7.4 | 7.5 | 8.0 | 6.3 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 13,187 | 16,078 | 17,401 | 18,501 | 19,575 | 20,706 | 8.2 | 6.3 | 5.8 | 5.8 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் .. | -220 | -144 | - 72 | - 71 | -119 | -438 | — | — | — | — |
| 7. மொத்த தேசிய உற்பத்தி ... | 12,967 | 15,934 | 17,329 | 18,430 | 19,456 | 20,268 | 8.8 | 6.4 | 5.6 | 4.2 |

(அ) தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*1978* ஆம் ஆண்டிலிருந்து முதலீடுகளின் பெருமளவு அதிகரிப்பினை இலங்கை பெற்றது. ஆயினும் இம்முயற்சிகள் பொருளாதாரத்தில் முக்கியமான அமைப்பியல் மாற்றங்களைநாளடைவில்ஏற்படுத்தவேண்டும். என எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில்,ஏற்றுமதிப்பயிர்களின்பதனிடல் தொடர்ந்தும் முதன்மையானதொரு நடவடிக்கையாக இருந்து வருகிறது. அதேபோன்று *1981* இல் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலிய சுத்திகரிப்பு தொழிற்பாடுகளின் அதிகளவு தாக்கத்தால் கைத்தொழில் துறையில் ஏனைய பகுதிகளும் தொடர்ந்து முக்கியத்துவமிக்கதாக காணப்பட்டுவந்தன. ஆடை ஏற்றுமதித்துறையில் ஆற்றல்மிக்க வளர்ச்சி அடையப்பெற்றது. இங்கும் ஒரேவகைசார்ந்த ஒருங்கிணைப்புடன் உள்நாட்டுப் புடவைகள், தொழிற்பாடுகளில் பெருமளவு பயன்படுத்தப்பட்டமை பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உதவுவதில் அதன் பங்கினை உயர்த்தியது.

*1981* இல், இலங்கை போன்ற முதல்விளைவுப்பொருள் உற்பத்தி நாடுகளுக்கான உலகபொருளாதார சூழல் தொடர்ந்தும் தெளிவற்றதாகவே இருந்துவருகின்றது. கைத்தொழில் நாடுகளில் காணப்படும் விலைமந்தம், உயர்ந்து செல்லும் வேலையின்மை, அதிகரித்துச் செல்லும் எரிபொருள் செலவினம், பணவீக்கம், உயர்ந்த வட்டிவீதங்கள், தொடர்ந்து மாற்றமடையும் செலாவணி வீதங்கள், உலகவர்த்தகத்தின்குறைந்தளவு வளர்ச்சி, மற்றும் பெற்றோலியம் தவிர்ந்த முதல்விளைவுப் பொருட்களின் வீழ்ச்சியுற்றுச்செல்லும் விலைகள் ஆகிய அனைத்தும் இலங்கை உட்பட பல வளர்ச்சியுறும் நாடுகளின் மிகுந்த இடர்பாடுகளுக்கு வழிவகுத்தன. முற்றிலும் எதிர்த்தாக்கமுள்ள பொருளாதார சூழலில் இலங்கை ஏற்றுமதி சார்பான வளர்ச்சி வழிமுறையை நடைமுறைப்படுத்தியதும் பரீட்சித்திருப்பதும் உண்மை அனுபவமெனினும் துர் அதிர்ட்டவசமானதே. குறுங்காலத்தில் உலகளாவிய நோக்கில் நல்ல வளர்ச்சிக்கான நம்பிக்கை அதிகளவில் காணப்படவில்லை. ஆயினும் பொதுவாக பாதகமான பன்னாட்டுச் சூழலொன்றில் இலங்கை போன்ற வளர்முக நாடு அதற்கு ஈடு கொடுத்தமை குறிப்பிடத்தக்கதொன்றுக விளங்குகின்றது. பன்னாட்டுத்தரத்துடன் ஒப்பிடும்பொழுது இலங்கையின் *5.8* சதவீதங்கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒருமித்து நோக்கின் இவ்வளர்ச்சி வீதம் சராசரி வீதத்தைவிட கணிசமான அளவில் உயர்ந்ததொன்றுகவே கருதல் வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தின்மீது பன்னாட்டுவர்த்தகமாற்று வீதத்தின் தாக்கம் 1981இல் தொடர்ந்தும் பாதகமானதாகவே இருந்துவந்தது. வர்த்தக மாற்று வீதச்சுட்டெண் (1978=100) 1980இல் 58 இலிருந்து 1981இல் 46 ஆக வீழ்ச்சியுற்றது. இதன்விளைவாக இறக்குமதி விலைகளுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகள் குறைவாக இருந்ததன் காரணமாக வர்த்தகத்திலிருந்தான இலங்கையின் இழப்பு ரூ. 14,060 இலட்சங்களாகும். மொத்த தேசிய உற்பத்தியை வர்த்தக மாற்று வீத தாக்கத்திற்காக சீராக்கஞ்செய்ததன் பின்னர் மதிப்பிடப்பட்ட உண்மையான தேசிய வருமானம் 1980இன் 3.7 சதவீதத்துடனும் 1979 இன் 2.6 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 1981இல் 3.4 சத வீதமாக அதிகரித்தது.

உள்நாட்டு மூலதன ஆக்கம், மொத்த நிலையான மூலதன ஆக்கம் ஆகிய இரண்டும் 1981இல் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டி முறையே 10.7 சதவீதத்தாலும் 18.0 சதவீதத்தாலும் அதிகரித்துக்காணப்பட்டன. 1980இன் இருப்புக்களிலிருந்த மூலவளங்களின் பயன்பாட்டின் விளைவாக நிலையான மூலதன ஆக்கத்தில் உயர்ந்த வீத வளர்ச்சி ஏற்பட்டது. அரசதுறை மூலதன ஆக்கம் 1981இல் 7.6 சதவீதமான வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டியவிடத்து இத்துறையில் நிலையான மூலதன ஆக்கம் 14.0 சதவீதத்தால் அதிகரித்தது. அரச மற்றும் தனியார்துறை கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கம் 16.9 சத வீதத்தால் அதிகரித்திருந்த வேளையில் அவற்றின் நிலையான மூலதன ஆக்கம் 19.0 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

மூலதன ஆக்கத்தின் பெருமளவு விரிவாக்கம் குறிப்பாக இறப்பர், தெங்கு மீள்நடுகைகளிலும் காணி அபிவிருத்தித் தொழிற்பாடுகளிலும் காணப்பட்டன. 1981 மாச்சில் மொத்தக் கழிவு வசதி இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக முதன்மை முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட குறைந்தளவு இறக்குமதி அண்மைய ஆண்டுகளில் ஏறக்குறைய 37 சதவீத மட்டத்தினைக் கொண்டிருந்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் இறக்குமதி உள்ளடக்கத்தை 30 சதவீதமாக கணிசமானளவில் குறைத்தது.

உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் பொருட்களின் இறக்குமதியும் காரணியல்லாப் பணிகளை உள்ளடக்கி நாட்டிற்கு கிடைக்கற்பால தாகஇருந்த மூலவளங்கள் 1979, 1980 இன் முறையே 11 சதவீதத்துடனும், 8.3 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 1981 இல் 5.3 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டன. 1980 உடன் ஒப்பிடுகையில் 1981 இல் பொருட்களின் இறக்குமதிகள், காரணியல்லாப் பணிகளின் அதிகரிப்பு வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு பொருளாதாரத்தில் மூலதனத்தின் குறைந்த கிடைப்பனவே காரணமாகும். எனவே பொருளாதாரத்திற்குக் கிடைக்கற்பாலதாக இருந்த மொத்த மூலவளங்களின் உள்நாட்டு உற்பத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூல வளம் தொடர்பான பங்கு அதிகரித்தது. பொருளாதாரத்திற்குக் கிடைக்கப் பெற்ற மொத்த மூலவளத்தின் நுகர்வு ஏறக்குறைய 62 சதவீதத்தையும் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 18 சதவீதத்தையும் ஏற்றுமதிகள் ஏறக் குறைய 20 சதவீதத்தையும் கவர்ந்தமை 1980 இல் அவதானிக்கப்பட்ட தன்மையி லிருந்தும் குறிப்பிடத்தக்க மாற்றமெதையும் காட்டவில்லை.

1980 இன் ரூ. 7,4000 இலட்சங்களுக்கு மாறாக 1981 இல் உள்நாட்டுச் சேமிப் புக்கள் ரூ. 10,5000 இலட்சமாக மதிப்பிடப்பட்டன. மொத்த உள்நாட்டு உற் பத்திக்கான சேமிப்புக்களின் விகிதம் 1980 இன் 11.2 உடன் ஒப்பிடுகையில் 12.3 ஆக இருந்தது. ஆயினும் முக்கியமானதாகக் கருதப்படும்வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்களுடன் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கை யரால் மேற்கொள்ளப்பட்ட பெருமளவு பண உள்ளனுப்பல்களின் அளவுகளையும் கருத்திற்கொள்கையில் மொத்தச் சேமிப்புக்கள் ரூ. 46000 இலட்சத்தால் அதிகரித் திருக்குமென மதிப்பிடப்பட்டது. இதனுல் மொத்தச் சேமிப்பு விகிதம் 16.8 சதவீதமாக விளங்கி 1980ஐ விட முன்னேற்றமொன்றைக் காட்டிநின்றது. 1980ஐப் போன்று உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் முதலீடுகளுக்கும் இடையி லான பெரும் இடைவெளியின் தாக்கம் பொருட்களினதும் பணிகளினது தேறிய இறக்குமதியால் கவரப்பட்டது.

முதலீட்டுத் திட்டங்களின் ஒருபகுதி மாத்திரம் உள்நாட்டு சேமிப்புக்களால் நிதியிடப்பட்டதுடன் மீதி வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்படவேண்டியிருந்தது. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பெரிய குறைகளினை ஏற்படுத்தி நிதியிடுவதன் மூலமே நாடு கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்த மட்டத்திலான முதலீடுகளிற்கு ஆதரவளிக்க முடிந்ததென்பது கண்கூடு. உள்நாட்டு சேமிப்பு முயற்சிகள் வெளிநாட்டில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலங்கையர்களின் பணஉள்ளனுப்பல்களினுல் அதிகரித்த போதிலும் உள்நாட்டு சேமிப்பு முயற்சியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படாமல் உயர்ந்த மட்டத்திலான மூதலீடுகளிற்கு ஆதரவளித்தல் மேலும் கடினமானதாகவிருக்கும். 1977 ஆம் ஆண்டின் 18.4 சதவீத உயர்மட்டத்துடன் ஒப்பிடுமிடத்து, உள்நாட்டு சேமிப்பு விகிதம் கடந்த இரண்டு ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்துள்ளது. இது ஒருபுறம் பொருளாதாரத்திலேற்பட்ட பணவீக்கப் போக்கினதும், இன்னெருபுறம் நாடு அனுபவித்த பாதகமான வர்த்தக மாற்று விகிதத்தினதும் விளைவாகும். உயர்ந்த மட்டத்திலான முதலீட்டு முயற்சியைப் பாதுகாக்கும் பொருட்டு, அடுத்த சில ஆண்டுகளில் ஏற்றுமதி நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணலும், முதலீட்டிற்கான மூலங்கள் கிடைக்கக்கூடியமையை அதிகரிக்கும்பொருட்டு நடுத்தர தவணையில் சென்மதி நிலுவையை பலப்படுத்தலும் இன்றியமையாததாகும்.

பரந்தளவில் நோக்கும்பொழுது 1981 இல் இலங்கையின் பொருளாதார செயலாற்றம் 1980 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் பொதுவான திருந்திய முன்னேற்றம் ஒன்றினைக் காட்டிநின்றது. 1980ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையில் பெருமளவிலான ஒரு முழுமையான குறையை ஏற்படுத்திய அரச இறைத்தொழிற்பாடுகளின் அடிப்படையில் கணிசமான சமநிலையற்ற அபிவிருத்திகள் ஏற்படக்கூடிய அறிகுறிகள் காணப்பட்டன. 1981 இல் கையாளப்பட்ட சிறந்த கேள்வி முகாமைக் கொள்கைகளின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டக் குறையானது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாகவும் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குக் குறையானது மொத்தத் தேசிய உற்பத்தியின் 16 சத வீதத்திலிருந்து 11 சத வீதமாகவும் வீழ்ச்சியுற்றன. முக்கியமாக நன்கமைந்த வரவு செலவுத்திட்ட நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் தொடர்ந்தும் மேல்நோக்கியசீராக்கம் செய்யப்பட்டவிடத்தும் பணவீக்க வீதம் வீழ்ச்சியுற்றுக்காணப்பட்டது. இத்திருந்திய செயலாற்றங்கள் ஏற்பட பொதுச் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பும் இறுக்கமான கட்டுப்பாடும் கொடுகடனின் மீதான செலவினத்திலும் கிடைப்பனவிலும் தாக்கத்தை ஏற்படுத்திய நாணயவியல் வழிமுறைகள், மொத்தக் கழிவுகளை புதுபிக்காது விட்டமை போன்றவற்றை உள்ளடக்கிய வழிமுறைகள் முக்கிய காரணங்களாக இருந்தன. இவ்வாண்டுக்காலத்தில் செலாவணி வீதம் சில முதன்மை பன்னுட்டு நாணயங்களுக்கு எதிராக தேய்வுற்று இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தக பங்காளருக்குமிடையிலுள்ள பணவீக்க வேறுபாடுகளை ஓர் அளவில் பிரதிபலித்துக்காட்டியதன் மூலம் இலங்கை தனது ஏற்றுமதியில் போட்டி அடிப்படையிலான இலாபங்கள் தேய்வுறாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டது. குறிப்பாக1980இல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட கணிசமான அளவு சமநிலையின்மையை பொறுத்தமட்டில் இச்சீராக்கங்கள் கடினமானதாக இருந்தபோதிலும் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. இத்தகைய கொள்கைகள் பின்பற்றப்பட்டபோதிலும் 1981இல் முழுமையான பொருளாதார வளர்ச்சிவீதம் நிலையாக இருந்தமை இன்னும் கூடுதலான உறுதியான பொருளாதாரச் செயலாற்றம் இலங்கையில் இன்னமும் சாத்தியப்படக்கூடியதுதான் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. இவ்வகையில் 1981இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மெச்சத்தக்கதாக இருந்தன.

இறைக்கொள்கை நோக்கில் 1980 இனைவிட 1981 இன் வரவு செலவுத் திட்ட விளைவுகள் முன்னேற்றங்களைப் பிரதிபலித்த வரவு செலவுத் திட்டக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாக வீழ்ச்சியுற்றிருந்த வேளையில், வங்கி நிதிப்படுத்தலிற்கான நாடுகை

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக வீழ்ச்சியுற்றிருந்தது. மொத்த வருவாயில் 15 சதவீதங்கொண்ட வீழ்ச்சி காணப்பட்டவேளையில், மொத்தச் செலவினம் ஏறக்குறைய 3 சதவீதத்தால் அதிகரித்தது. ஆயினும் நடைமுறைக்கணக்கில் பதிவு செய்யப்பட்ட குறையானது. அரசு அதன் மூலதனச் செலவினத்தில் ஒரு பகுதிக்கு நிதியிடத்தேவையான நிதிகளை அதன் சொந்தச் சேமிப்புக்கள்மூலம் பெற்றுக்கொள்ள இயலாதிருந்ததை எடுத்துக் காட்டியது.

1977ஐ தொடர்ந்துவந்த ஆண்டுகளில் மூலவளம் திரட்டும் முயற்சியில் அரசின் பங்கு கணிசமான அளவில் இருந்தவேளையில் அரசு இரு முக்கிய பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. முதலாவது எமது ஏற்றுமதி விலைகளில் பாதகமான போக்கு காணப்படுவதால் உற்பத்தியாளரின் இலாப எல்லையைப் பேணுவதற்கு ஒன்றில் ஏற்றுமதித்தீர்வைகளில் கீழ் நோக்கிய சீராக்கத்தினைத் தூண்டுதல் அல்லது செலாவணி வீதத்தில் மேலும் குறைப்பினை ஏற்படுத்தல் அல்லது இவ் இரண்டையும் மேற்கொள்ளவேண்டும். அரசின் மொத்த வருவாய்களில் ஏற்றுமதித் தீர்வையிலிருந்தான வருவாய் பெரியதொரு கூறாக விளங்கியமையால் மிகவும் ஊறுபடக்கூடிய ஒன்றாகக் கருதப்பட வேண்டும். இரண்டாவதாக கடந்த நான்கு ஆண்டுகளில் வரி வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சி பணவீக்கப் போக்குகளுக்கு அமைவாக குறிப்பிடத்தக்களவில் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்காமையை எடுத்துக்காட்டியது. இப்போக்கு 1981 இலும் தொடர்ந்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் வருவாய்க்குமிடையிலான விகிதம் 1980 இல் 21 சதவீதத்திலிருந்து 1981 இல் 19 சதவீதமாக வீழ்ச்சியுற்று 0.54 சதவீதம் மாத்திரம் கொண்ட மிதப்புத் தன்மையை பிரதிபலித்தது.

விலைகள் கட்டுப்பாடற்று உயர்ந்து செல்வதன் பாதிப்பு உடனடியாக உணரப்படும் வேளையில் பெருமளவு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கில் வருவாயில் ஏற்படும் பற்றாக்குறையான வளர்ச்சியானது வரவு செலவுத்திட்டக்குறையின் அளவினை அதிகரிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. வெளிநாட்டு உதவியின் அதிகரித்த மட்டங்களும், வங்கியல்லா மூலங்களிலிருந்தான கடன் பாடுகளும் வளர்ந்துவரும் குறைகளுக்குத் தேவையான நிதிகளை பெற்றுக் கொடுக்கப்போதுமானதாக காணப்படவில்லை. இது மூலவளங்களுக்காக தனியார் துறையும் பொதுத்துறையும் பெருமளவில் போட்டியிட வழிவகுத்தது.

பொதுத்துறை முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் தனியார்துறை முதலீடுகள் குறுங்காலத்தில் விளைவினைத்தரும் தன்மைமிக்கதாய் இருக்கின்றவேளையில் மூலவளங்களுக்காக இவ்விரு துறைகளும் பொருதுவது கேள்வி முகாமையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக அமையும். கடந்த இரு ஆண்டுகளாக வரவு செலவுத்திட்டத்தை நிதியிடக்கூடிய செலவினமிக்க வெளிநாட்டு நிதிப்படுத்தல்களை நாடுகின்ற போக்குக் காணப்படுகின்றது. பணுட்டு வட்டி வீதங்கள் தொடர்ந்தும் அதிகரித்த மட்டத்தில் இருக்கும் நிலையில் வெளிநாட்டு வர்த்தக ரீதியான நிதிகள், செலவினம் மிக்கதாக இருக்கின்றன. அதே வேளையில் அத்தகைய நிதிபடுத்தல்கள், வரவு செலவுத்திட்டத்தினை நிதிப்படுத்தலில் வங்கித் தொழில் முறையை நாடுவதைக் கட்டுப்படுத்த உதவுமெனினும் அது கடன் தீர்ப்பனவுப்பிரச்சனைகளை உண்டுபண்ணலாம்.

வருமானத்தில் ஏற்படும் வழமையான அதிகரிப்புக்களுக்கு ஏற்ப வரி அமைப்புப்போதிய இசைவு வழங்காமையினல் இறைக்கொள்கையில் வேறும் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இத்தகைய நெகிழ்ச்சிப் பற்றாக்குறைக்கு அரசிறை அதிகாரிகளின் (எடுத்துக்காட்டாக: மொத்த விற்பனைவரி) நடைமுறைப்படுத்தும் ஆற்றல்

குறைவாக இருப்பதனுலோ அல்லது பல்வேறு வரி விடுப்புக்கள் வழங்கப்பட்டிருப் பதனுலோ ஏற்பட்டிருக்கலாமெனினும் இதன் காரணமாக இக்குறைபாட்டை நீக்குவதற்கு அரசு வரியில் பாகுபாடுகளைக் கொண்டதும் எதேச்சையானதுமான மாற்றங்களை அவ்வப்போது ஏற்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இதனுல் நியாயமான வரி வீதங்களைக் கொண்ட நிலையான வரிமுறை என்ற இலக்கு கடினமான ஒரு இலக்காகின்றது. நேர்வரிகளின்மீது தாராளமான வரி ஊக்கு விப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இச்சுமையானது வாழ்க்கைச் செலவிலும் வருமானப்பங்கீட்டிலும் சிக்கல்களை ஏற்படுத்தும் சார்புரீதியில் பின்னடைவான நேரில் வரியினுல் ஏற்கப்படவேண்டும்.

இவ்வாண்டின் நாணய விரிவாக்கத்தில் ஓரளவு மிதமான தன்மை காணப் பட்டது. 1980 இல் என்றுமில்லாதவகையில் 81 சதவீதமாக விரிவுற்ற உள் நாட்டுக்கொடுகடன் இவ்வாண்டில் 33 சதவீதமாக ஆகக்குறைந்த மட்ட அதி கரிப்பினைப் பதிவு செய்திருந்தது. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) 1980 இன்47 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதங்கொண்ட குறைந்த வீதத்தில் வீழ்ச்சியுற்றது. இம்மாற்றங்களைப்பிரதிபலிக்கும் வகையில் குறுகிய பணம் ($M_1$) 6 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் விரிந்த பணம் ($M_2$) 23 சதவீதத்தால் அதிகரித்துக்காணப்பட்டது. இவ்வாண்டில் கடைப்பிடிக் கப்பட்ட நன்கமைந்த இறைத்தொழிற் செயலாற்றம், வலுமிக்க நாணயக் கொள்கை ஆகிய இரண்டும் மிதமான நாணய விரிவாக்கத்திற்கு காரணமாக விளங்கின.

ஆண்டின் நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை வழி முறைகளின் காரணமாக ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் நாணய விரி வாக்கவீதம் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்து காணப்பட்டது. 1980 இல் இருந்து நிலைமையைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டநாணயக் கொள்கை வழிமுறைகள் 1981 இல் தொடர்ந்திருக்கவேண்டியிருந்ததுடன் ஆண்டின் முதல ரைப்பகுதியில் உள்நாட்டுக் கொடுக்கடன் விரிவாக்கம் உயர்ந்த மட்ட வீதத்திலேயே தொடர்ந்திருந்தமையால் இவ்வாண்டில் இவ்வழிமுறைகள் மேலும் வலுவுறச்செய்யப்பட்டன. இந்நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி தனியார்துறையினருக்கான கொடுகடன் விரிவாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் 1981 மேயில் முற்றிலும் நேரடியான வழிமுறைகளைக் கைக்கொண்டது. ஆயினும் இந்நேரடி வழிமுறைகள் கூடியவிரைவில் தளர்த்தப்பட்டு பொதுத் தன்மைமிக்க நாணய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் மத்தியவங்கி தொடர்ந்தும் நெறிமுறை சார்ந்த இணக்கத்தினூ டாக வங்கிக்கடன் வழங்கலை ஒழுங்குபடுத்தியது. யூன் தொடக்கத்தில் தனியார் துறைக்கான கொடுகடனின் வழங்கலில் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. இவ்வழிமுறைகள் குறிப்பிட்ட சில வர்த்தக வங்கி களின் கடன் வழங்கும் வீதங்களில் காலப்போக்கில் அதிகரிப்பைத் தூண்டின. பல்வேறு வடிவங்களைக் கொண்ட சேமிப்புத்திட்டங்களை ஏற்படுத்தும் அதிகரித்த வழிகளின் மூலம் வைப்புக்களைத் திரட்டுவதற்கு தீவிரமான முயற்சிகளை மேற் கொள்ள வங்கிகளைக் தூண்டுவஃதிலும் இவை வெற்றி கண்டன. எனினும் வைப்பு வீதங்களில் பொதுவான அதிகரிப்பு இருக்கவில்லை. வைப்புக்களைத்திரட்டுவதற் கான முயற்சிகள் உயர்ந்த வெற்றியை உறுதிசெய்ததுடன் ஆண்டு இறுதியில் மிகப்பெரும் வங்கிகள் சிறந்த திரவ நிலைமையை அடைந்தன. அதிக இறுக்கமான செறிவான நாணயக் கொள்கை வழிமுறைகளின் பெருமளவு விளை வாகத் தனியார்துறைக்கான (அரச கூட்டுத்தாபனங்களுட்பட) கொடுகடன் விரி வாக்கம் 1980ஆம் ஆண்டில் 47 சதவீதத்திலிருந்து 1981 இல் 27 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது.

1981 ஆம் ஆண்டு நாணய வங்கித்தொழில்துறையும் குறிப்பிடத்தக்க கணிசமான அபிவிருத்தியைக்கொண்டிருந்தது. இம்முறையிலுள்ள மேலதிக திரவ நிலைமையை அகற்றும் நோக்குடன் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை ஏப்பிரலில் மத்தியவங்கி தொடங்கியது. திறைசேரி உண்டியல்களின் தொழிற்படு சந்தையினை உயர்த்துவதன் மூலம் இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கியினால் வங்கிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பணமும் செலாவணி தரகர்களூடாக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. மத்தியவங்கி அது தொடங்கியதிலிருந்து முதற் தடவையாக அதன் சில தொழிற்பாடுகளை பரவலாக்குவதையும் இவ்வாண்டு எடுத்துக்காட்டியது. பிரதேச நடவடிக்கைகளை குறிப்பாக கிராமியத்துறைக்கான கொடுகடன் ஏற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் வங்கி அதன் முதலாவது பிரதேசக் கிளையை 1981 மாச்சில் மாத்தறையில் திறந்தது. தனியார்துறை, அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கலை உள்ளடக்கி மத்தியவங்கியால் இலங்கையில் முதன் முதலாக தேசிய கொடுகடன் திட்டம் உருவாக்கப்பட்டது. நாணயக் கொள்கையை உருவாக்குதல், கொடுகடன் வளர்ச்சியை வழிநடத்தல், முன்னுரிமைத்துறைகளுக்குப் போதுமான கொடுகடன் வழங்கலை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் இதன் நடவடிக்கைகள் பயனுடையன என உறுதிப்படுத்தப்பட்டன இவ்வாண்டில், ''கறுப்புப்பணத்தை'' நிறுவனப்படுத்தல் துறைக்குக் கொண்டுவரும் முக்கிய நோக்கமாக சில வங்கிகளால் வைப்புச் சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வைப்புச் சான்றிதழ்களுக்கு மீள் கழிவு வசதி சில வங்கிகளாலும் நிறுவனங்களினாலும் கிடைக்கச் செய்யப்பட்டன. நீண்டகால வைப்புக்களைக் கவரும் நோக்கில் ஓய்வூதியத்திட்டம் வயது வராதோர் வைப்புத்திட்டம் போன்ற பல புதிய சேமிப்புக்கள் சில வங்கிகளால் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டன. வழமையான வர்த்தக வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கான வரையறுக்கப்பட்ட அவற்றின் நடவடிக்கையின் செயற்பாடுகளிலிருந்தும் விலகி வர்த்தக வங்கிகள் வணிகவங்கித் தொழிலில் தமது நடவடிக்கைகளை விரிவாக்கின. இவ்வாண்டில் இன்னொரு முக்கிய பண்பாக இருந்த கேள்வி வைப்புடன் தொடர்பான தவணை, சேமிப்பு வைப்புக்களின் உயர்ந்த வளர்ச்சி, வைப்பாளர்கள் தீவிரமான வட்டிவிருப்புணர்வுடையவர்கள் என்பதனை எடுத்துக்காட்டியது. இதன் விளைவாக வங்கித்தொழில் முறைக்கான நிதியின் சராசரிச் செலவும் மேல்நோக்கி நகர்ந்தது. இவ்வாண்டுக்காலத்தில் நடுத்தர நீண்டகால நிதியத்தின் கீழான மீள் நிதியிடல் வசதிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டதுடன் வங்கிகளும் கொடுகடன் நிறுவனங்களும் ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தியில் மிகக் கூடியளவிற்கு பங்குபெறுவதை இயலச்செய்வதற்கு இத்திட்டத்தின் நோக்கம் விரிவாக்கப்பட்டது.

ஆற்றல்மிக்க கேள்வி முகாமைக்கொள்கைகள் பின்பற்றப்பட்டமையின் காரணமாக 1981இல் பணவீக்க வீதம் ஓரளவிற்கு மிதமாக்கப்பட்டதுபோல் தோன்றியது. அலுவல்சார் வாழ்க்கைச் செலவுச்சுட்டெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கடந்த ஆண்டின் 26 சதவீத உயர்வுக்கெதிராக 1981 இல் 18 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. அரிசி, மா, பாண் ஆகியவற்றின் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமை இவ்வதிகரிப்பில் ஏறத்தாழ அரைப்பங்கிற்கு வகைகூறின. மத்திய வங்கியின் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 1980இன் 34 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பில் ஏறத்தாழ மூன்றிலிரண்டுபங்கு உள்நாட்டுதொகுதி விடயங்களில் ஏற்பட்டிருக்கையில் மிகுதி இறக்குமதித் தொகுதிப் பண்டங்களில் காணப்பட்டது. கூலிகளைப்பொறுத்தமட்டில் ஆண்டின் பிற்பகுதியில் அரசதுறையில்

கூலிகள் வாழ்கைச் செலவுச்சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக விளங்கியது. எனினும் கூலிச்சபையினுல் உள்ளடக்கப்பட்ட மத்திய அரசு ஊழியர் தொழிலாளர்களை உள்ளடக்குகின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட துறையின் பணக்கூலி அதிகரித்த நிலையிலும் கூட உண்மைக்கூலிகள் 1981 இல் வீழ்ச்சியடைந்தபோதும் 1980ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க இது குறைந்த வீதமேயாகும். நிறுவன மயப்படுத்தப்படாத துறையில் குறிப்பாக நெல், கட்டடவாக்கம் போன்றவற்றில் தீவு முழுவதற்குமான நாளாந்தக் கூலி வீதங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட துறைகளிலும் பார்க்க மிக உயர்ந்த வளர்ச்சியைக் காட்டின. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினுல் சுருக்கப்பட்ட பொழுதும் இத்துறையின் உண்மைக்கூலிகள் அதிகரிப்பைப் பதிவு செய்தன.

தொழில் நிலையைப்பொறுத்தவரையில் அதன் செயலாற்றம் முன்னைய ஆண்டைப்பார்க்கிலும் 1981இல் சிறப்பாக இருந்தமையை கிடைக்கத்தக்க தரவுகள் எடுத்துக்காட்டின. இவ்வாண்டுக் காலத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட துறைகளில் எடுத்துக்காட்டாக அரச திணைக்களம் அரசுசார் நிறுவனங்கள் திணைக்களம், அரசுசார் நிறுவனங்கள், ஊழியர் சேமநிதிக்கு உதவு தொகை வழங்கும் தனியார்துறை முயற்சிகளின் மொத்த எண்ணிக்கையை 1979ஆம் 1980ஆம் ஆண்டுகளின் முறையே 115,000; 18,035உடன் ஒப்பிடுகையில் 40,622 ஆக இருந்தது. நிறுவனமயப்படுத்தப்பட்ட தனியார் துறையில் ஏற்பட்ட இம் மொத்த அதிகரிப்பு 1980இன் 3,030இலிருந்து 1981இல் 26,156 இற்கு மிகக்கூடியளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. நிறுவனமயப்படுத்தப்படாத துறையின் தொழில்நிலை அபிவிருத்தியின்மீது தரவுகள் கிடைக்கவில்லை. எனினும் 1981இல் நிறுவனமயப்படுத்தப்படாத துறை தனித்து உண்மைக் கூலிகளில் அதிகரிப்பைக் காட்டியதற்கு மாருக அத்தகைய கூலிகள் நிறுவனமயப்படுத்தப்பட்ட துறையில் வீழ்ச்சியடைந்தமை இத்துறையில் கிடைக்கத்தக்கனவாக இருந்த தொழிலாளர் வழங்கல்களிலும் பார்க்கக் கேள்வி உயர்வானதாக இருந்தமையினை எடுத்துக்காட்டியது. 1978-1981 நான்காண்டுக் காலப்பகுதியில் நிறுவனமயப்படுத்தப்பட்ட துறையில் உருவாக்கப்பட்ட புதிய தொழில் வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை 318,847 ஆக விளங்கியது. ஒவ்வொரு ஆண்டும் புதிதாகத் தொழிற்சந்தைக்குள் புகுவோர் தொகை 125,000என மதிப்பிடப்பட்டிருப்பதன் காரணமாக தொழிலின்மையில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை நிலைப்படுத்துவதற்கு, தொழில் வாய்ப்புக்களை அடுத்துவரும் சில ஆண்டுகளில் மிகக்கூடியளவு விரைவாக அதிகரிக்க வேண்டியிருக்கும்.

மேலும் பொருளாதாரம் உறுதியாவதற்கான வாய்ப்புக்கள் உள்நாட்டு உற்பத்தி மட்டம், இறக்குமதி இயலளவு, அரசின் வரவு செலவுத்திட்டம், நாணய கொடுகடன் வளர்ச்சி ஆகியவற்றின் மீது பெருமளவிற்கு தங்கியுள்ளது. நீண்ட காலத்தில் இறக்குமதி இயலளவு முக்கியமாக ஏற்றுமதி செயலாற்றத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. ஏற்றுமதியினுல் வழிநடத்தப்படும் உபாயம் முக்கியமாக நடுத்தர நீண்டகால இலக்கைக் கொண்டவையாகும். ஏனைய விடயங்களுடன் உள்நாட்டு வேளாண்மை, கைத்தொழிலின் வெளியீடு கொடுகடன், சேமிப்புக்களின் செலவில் தங்கியிருக்கின்றன. பணவீக்கத்தின் உயர்ந்த வீதம் சேமிப்பை ஊக்கமிழக்கச் செய்வதுமட்டுமன்றி தொடர்ச்சியான உயர்ந்த வட்டி வீதங்களையும் கட்டாயப்படுத்துவதனுல் கொடுகடன் செலவின் உயர்வுகள் தவிர்க்க முடியாதவையாகின்றன. இதன் விளைவாக குறுங்காலச் சேமிப்புக்கள் முதலீடுகளைத் தூண்டக்கூடிய உறுதியான விலைகளைப் பேணுகின்ற பொறுப்பு இறைக்கொள்கை, நாணயக் கொள்கை இரண்டின் மீதும் விழக்கூடும். இறை, நாணயக்கொள்கை இரண்டிற்குமான கட்டுப்பாட்டை உறுதியான விலைக்கான தேவை வற்புறுத்துகின்றது.

பொருளாதார உறுதிப்பாட்டை பயனுடைய வகையில் ஏற்படுத்த வேண்டுமாயின் நாணயக்கொள்கையும், இறைக்கொள்கையும் ஒரே இலக்கினைக் கொண்டவையாக இருக்கவேண்டும். விரிவாக்கத்தன்மை நிறைந்த இறைக்கொள்கை நடைமுறையிலிருக்கின்ற வேளையில் கட்டுப்பாடான நாணயக்கொள்கை சிறிதளவு தாக்கத்தையே கொண்டிருக்கும். 1979ஆம் ஆண்டுடன் தொடங்கிய இறை விரிவாக்கம், உள்நாட்டுக்கொடுகடன் விரிவாக்கத்தையும் தேறிய வெளிநாட்டு ஒதுக்குகளின்மீது விரைவுபடுத்தப்பட்ட எடுப்பனவையும் தூண்டியது. வெளிநாட்டுச் சொத்துக்களின் இழப்பு நாணயக்கூட்டுக்களான குறுகிய பணநிரம்பல் ($M_1$) விரிந்த பணநிரம்பல் ($M_2$) இரண்டின் மீதும் சுருக்கத்தாக்கத்தை ஏற்படுத்துமென்பது உண்மையே. மிகையான உள்நாட்டுக்கொடுகடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் இத்தகைய நாணயச் சுருக்கமானது கொடுகடனுக்கான கேள்வியைக் கட்டுப்படுத்தாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் திருப்திகரமான மட்டத்தில் இறக்குமதிகளின் ஒதுக்குகளைப் பேணுவதற்கான அவசியத்தை நோக்குகையில் வெளிநாட்டு ஒதுக்கில் ஏற்படும் இழப்புக்கள் மூலமாக மிகையான கொடுகடன் விரிவினை வெளியேற்றுவதற்கும் ஓர் எல்லையுண்டு.

வர்த்தகப் பக்கத்தில் கேள்வி முகாமைக் கொள்கைகள் முழுமையான செயலாற்றத்தை முன்னேற்றியதற்கான நம்பிக்கைதரும் அறிகுறிகள் காணப்பட்டன. இவ்வாண்டுக்காலத்தில் ஏற்றுமதிகள் (ரூ. 205,850 இலட்சம்) இறக்குமதிகளை (ரூ. 352,510 இலட்சம்) விட விரைவான வேகத்தில் வளர்ச்சியடைந்தன. உண்மையில் இறக்குமதி உட்பாய்ச்சலில் ஏற்பட்ட மிதமான தன்மை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். நிலையான சிஎஉ நியதிகளில் 1980 ஆம் ஆண்டு 41 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த இறக்குமதிகளின் வளர்ச்சிவீதம் 1981 இல் சிறிதளவான பாதகமான வளர்ச்சியைக் காட்டியது. எனினும் வர்த்தக நிலுவை தொடர்ந்தும் பற்றுக்குறையானதாகவே இருந்தது. ரூ. 146,660 இலட்சங்களாக அமைந்த வர்த்தக நிலுவை 1980 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குறையிலும் பார்க்க 10 சதவீதம் குறைவானதாகும். 1981 இல் ஏற்றுமதி வளர்ச்சி வீதத்தில் அதிகரிப்புக் காணப்பட்டவேளையில் இதன் வளர்ச்சி வீதம் இன்னமும் போதியதற்றதாகவே இருக்கிறது. இவ்வாண்டில் 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வர்த்தக மாற்றுவிகிதத்தில் மேலும் ஏற்பட்ட மோசமான நிலைமைகள் பிரச்சினைகளை அதிகரித்தது. எனினும் ஏற்றுமதித்துறையின் முழுமையான செயலாற்றத்தின் எதிர்காலம் எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கைக்கு இடமளிக்கிறது. தேயிலை தவிர்ந்த முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களின் ஏற்றுமதி அளவுகள் ஓரளவு வளர்ச்சியைக்காட்டின. புடவைகளும், ஆடைகளும், சிறு ஏற்றுமதி வேளாண்மை உற்பத்திகள், ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆகியவற்றிலிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் 1981 இல் ஏற்பட்ட ஏற்றுமதிகளின் உயர்ந்த வளர்ச்சிக்கு பெருமளவிற்குப் பொறுப்பாகவிருந்தன. இறக்குமதிப்பக்கத்தில் ஆண்டின் தொடக்கத்தில் மொத்தக் கழிவு சலுகைகள் மீளப்பெறப்பட்டதன் விளைவாக முதலீட்டுப் பொருட்கள் பெருமளவு வீழ்ச்சியைக்காட்டின. இடைநிலைப் பொருட்களின் பங்கில் அதிகரிப்புக் காணப்பட்டவேளையில் நுகர்வுப் பொருட்களின் மொத்த இறக்குமதியில் அவை தொடர்பான பங்கு கூடிக்குறையாமல் ஒரே நிலையில் பேணப்பட்டன.

இலங்கையின் சென்மதி நிலுவையும் 1980 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1981 இல் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றம் அடைந்தது. 1980 ஆம் ஆண்டின் சிஎஉ 1660 இலட்சம் (ரூ. 29,670 இலட்சம்) கொண்ட பெருமளவு முழுமையான பற்றுக்குறைக்கு எதிராக 1981இல் குறை சிஎஉ 260 இலட்சமாக(ரூ.4,060இலட்சம்)

இருந்தது. சிறந்த கேள்வி முகாமைக்கொள்கைகளும் நெகிழத்தக்க செலாவணி வீதக்கொள்கைகளும் இவ் அபிவிருத்திக்கு உதவியதுடன், இவை தாழ்ந்த வர்த்தகம், அதேபோன்று நடைமுறைக் கணக்குக் குறைகளில் பிரதிபலித்தன. குறுகிய வர்த்தகக் குறை காணப்பட்ட சூழ்நிலையில் தனியார் பணவனுப்பல்கள், அலுவல் சார் மாற்றங்கள் இரண்டினதும் காரணமாக ஏற்பட்ட பெருமளவு உட்பாய்ச்சல் 1981 ஆம் ஆண்டின் நடைமுறைக்கணக்கில் குறையை விளைவித்து முன்னைய ஆண்டிலும் பார்க்க குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டின. வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான கணிசமான உதவிகள் நேரடி முதலீடுகள் குறுங்காலக் கடன்பாடுகள் போன்ற வடிவங்களிலமைந்த பெருமளவு மூலதன உட்பாய்ச்சல்கள் ஆகியன முழுமையானசென்மதி நிலுவைக்குறையை மிதமான விகிதாசாரத்திற்குக் கட்டுப்படுத்த உதவின. வெளிநாட்டுதவிக்கடன்கள் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான நன்கொடை எடுப்பனவுகள் போன்ற மரபுவழிமுறைகளிலிருந்தான மூலவளங்களின் கிடைப்பனவுத்தொகை வரையறுக்கப்பட்டிருந்தமையால் அரசு அதே போன்று அரசதுறைக் கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட வர்த்தகக் கடன்பாட்டு நடவடிக்கையே பற்றுக்குறை நிதியிடலின் குறிப்பிடத்தக்க பண்பாக இருந்தது. எனினும் 1981 இல் வெளிநாட்டுமூலவள இடைவெளியின் பெரும்பங்கு நாணயமல்லா மூலதனங்களால் நிதியிடப்பட்டது.

1981 ஆம் ஆண்டுக்காலத்தில் மொத்த வெளிநாட்டுச்சொத்துக்கள் ரூ. 24,560 இலட்சங்களால் (சிஎஉ 914இலட்சம்) அதிகரித்த வேளையில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 4,060 இலட்சம் (சிஎஉ 260 இலட்சம்) கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. 1981 ஆம் ஆண்டு முடிவில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் இரண்டு மாதங்களுக்குச் சற்றுக் கூடுதலான இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது. முழுமையான படுகடன் தீர்ப்பனவு விகிதம் (பநாநி, அரசதுறை நிரம்பலர் கொடுகடன் ஆகியவற்றிலிருந்தான கடன்கள் உட்பட) 1980 இல் 12.4சதவீதத்திலிருந்து 13 4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பநாநிதிய கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த படுகடன் தீர்ப்பனவுகள் விகிதம் 1980 இன் 7.5 சதவீதத்திலிருந்து 1981 இல் 6.8சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைத்தொகுதியில் ஒரு பகுதியாக செலாவணி வீத, தீர்வை கொள்கைகளும் வகுக்கப்பட்டன. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நெகிழத்தக்க செலாவணி வீத முகாமைக் கொள்கை, சென்மதிநிலுவையின் மீதான தாக்கத்தை இலகுவாக்க உதவியது. 1981 இன் எண் 69 கொண்ட மொத்த விற்பனை வரிச்சட்டத்தின் நடைமுறையுடன் செயற்படுத்துவதற்கு விடப்பட்ட இறக்குமதித்தீர்வை நடைமுறைப்படுத்தல் அமைப்பு மிகவும் விரும்பத்தக்க செம்மையான ஒரு விடயமாகும் இறக்குமதித்தீர்வைகள், பாதுகாப்புக்கூறு வருமானக்கூறு எனப்பிரிக்கப்பட்டதுடன் பின்னையது உள்நாட்டுத் தயாரிப்பு இணைக்கிணை விடயங்களுக்கும் அதே போன்றவற்றுக்கும் பொருந்தக் கூடிய மொத்த விற்பனை வரியைக்கொண்டிருந்தது. புதிய வரி அமைப்பு சுங்கத்தீர்வைகளின் பாதுகாப்பு செயற்பாடுகளின் சிறப்பான மதிப்பீட்டையும் வருமானம் அதேபோல் சென்மதிநிலுவை நோக்கங்கள் இரண்டிற்கும் பயன்படத்தக்க கூடியளவு நடவடிக்கைகளையும் இது தானாகவே வழங்குவதையும் உறுதிப்படுத்தவேண்டும். இத்தீர்வை மொத்த வரிகளின் எதிர்கால தேர்ந்த அதிகரிப்புக்கள் இன்றியமையாதன அல்லாத பொருட்களின் இறக்குமதிகளினதும் அதேபோன்று அத்தகைய விடயங்களின் வெளிப்படையான நுகர்வையும் ஊக்கமிழக்கச் செய்யும் என்பதுடன் உள்நாட்டு மூலவளங்களை அத்தகைய விடயங்களின் தயாரிப்புகளுக்குத் திருப்புகின்ற வேளையில் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குப் பொருத்தமான பாதுகாப்பு அளவையும் உறுதிப்படுத்தவேண்டும்.

தற்போதைய இறக்குமதித்தீர்வையின் அமைப்பு 1977 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விரிவுபடுத்தும் நடவடிக்கைகளிற்கு முன் 1977 ஆம் ஆண்டில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் விளைவேயாகும். இதிலிருந்து தற்போது வரியமைப்பினல் பாதிக்கப்பட்ட கைத்தொழிலின் பாது காப்பிற்கான தேவையையும் அதன் விளைவையும் மதிப்பிடும் எத்தகைய ஆய்ந்தறிந்த எத்தனங்களும் எடுக்கப்பட்டதாகத் தெரியாமையால் இதன் துறை களுக்கான விளைவாக முக்கியத்துவம் கொடுக்கப்படாத முதலீடுகள் தொடர்ந் தும் ஆதரவளிக்கப்பட்டு வழங்கலின் பிழையான ஒதுக்கீட்டுக்கு வழிகாட்டியது. இவ்வமைப்பின் தொடர்ச்சியானது எதிர்காலத்தில் இறக்குமதி பதிலீடு ஏற்றுமதிக் கைத்தொழில்களின் சார்பான விரும்பத்தகாத ஒரு வழிச்சாய்வுக்கு இட்டுச் செல்லலாம். இதன் காரணமாக செயற்றிறன் உடைய பாதுகாப்பு மட்டங்களின் அடிப்படையில் ஆய்ந்தறிந்து செய்யப்பட்ட ஒரு வரியமைப்பு முறையே உருவாக் கும் செயல் மிகவும் அத்தியாவசியமானதாக கருதப்படவேண்டியுள்ளது. உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் செயற்றிறன் உடைய பாதுகாப்பு மட்டங்கள் பற்றிய ஆய்விற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 1980 இல் முதல் நடவடிக்கை தொடங்கப்பட்டது. இவ்வேலைகள் இவ்விடயங்களைக் கவணிக்கவென நியமிக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவினல் மிகவும் பரந்தள விலும் அனைத்தையும் உள்ளடக்குகின்ற அடிப்படையிலும் தொடரப்படவேண் டியது மிக இன்றியமையாததாகும்.

வெளிநாட்டுக் கொடுப்பனவுகளில் நியாயமான உறுதியை ஏற்படுத்துவதற்கு இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சினையின் அடிப்படைப் பண்பில் முக்கிய சீராக்கங்கள் தேவைப்படுகின்றன. இவை குறுங்காலத்தில் அடைய முடியாதன வாகும். குறுங்காலத்தில் 1981 ஆம் ஆண்டைப்போன்று உறுதியான கொள்கைகள் கேள்வி முகாமையின் மீது கூடுதலாக நெறிப்படுத்தப்பட்டன. எனினும் நடுத்தர நீண்டகாலக் கொள்கைகள் ஏற்றுமதிகளின் விரிவாக்கம், பன்முகப்படுத்தலின் ஊடாக நீண்டகால நிலையான தன்மையில் வகுக்கப்படல் அவசியமானதாகும், ஆடைகள், பெற்ருேலியச் சுத்திகரிப்பு உற்பத்திகளை உள்ளடக்கிய ஏற்றுமதிக்கே உரிய கைத்தொழில் விரிவாக்கங்களுடனை ஏற்றுமதி அமைப்புக்கள் சில மாற்றங் களுக்கு உட்பட்டிருந்தபோதும் இவற்றில் பெரும்பாலான கைத்தொழில்களின் ஏற்றுமதி உற்பத்திகள் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தன. கூட்டப்பட்ட உள்நாட்டுப் பெறுமதி பொதுவாகக் குறைவாகவிருந்தது. தொடக் கத்தில் இலங்கையைப் போன்றசிறிய பொருளாதார அளவுடைய நாட்டில் இது தவிர்க்க முடியாததெனினும் கூட்டப்பட்ட உள்நாட்டுப் பெறுமதியின் மட்டத்தை உயர்த்துவதற்கான எதிர்காலக் கொள்கைகளை நோக்கங்களாக கொண்டிருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவது மிக இன்றியமையாததாகும்.

கட்டுப்பாடற்ற சந்தையும், அரசின் குறைந்த தலையீடுகளும் நெற்றுறையின் ஆர்வத்தை மிக அதிகளவிற்கு ஊக்குவித்திருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டு களிலும் உற்பத்திச் செலவு அதிகரித்த நிலையிலும் கூட இது ஏற்பட்டிருக்கின் றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்டமைபோன்று உண்மையான கீழ்மட்ட விலைகளின் வடிவில் அரசின் உதவி நிறைந்த தலையீடுகளின் வாயிலாக ஏனைய களப்பயிர் உற்பத்தியாளர்களிடமிருந்தும் இதே பலனை எதிர்பார்ப்பதற்கு மிகவும் போதுமான காரணங்கள் உண்டு. 1981 இல் சிறுவேளாண்மைப்பயிர்களின் ஏற்று மதி மிகவும் நல்லநிலையில் இருந்ததுடன் அண்மைய எதிர்காலத்தில் நாட்டின் ஏற்றுமதி வருவாய்களுக்கு கணிசமானளவு உதவுதொகைகளைக் கிடைக்கச்செய் வதற்கு வழங்கப்பட்ட சரியான ஊக்குவிப்புக்கள் தொடரப்படவேண்டும்.

இவ்வாண்டில் உற்பத்தியாளர் ஊக்குவிப்புக்களைப் பேணுவதில் அரசிற்கிருந்த ஆர்வம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. அரசின் வருவாய் பாதிக்கப் பட்டபோதும் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றின் மீதான ஏற்றுமதித்தீர் வைகள் அனைத்தும் உற்பத்தியாளர்களின் எல்லை இலாபங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு மிக அதிகளவில் குறைக்கப்பட்டன. தெங்கு ஏற்றுமதி வர்த்தகம், ஏற்றுமதி வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதனால் முக்கிய நன்மைகளைப் பெறும் ஒன்றாக மாறியது. உள்ளூர் துறையைப் பொறுத்தமட்டில் நெல்லின்உத்தர வாத விலை உள்ளீடுகளின் உயர்ந்த செலவைப்பிரதிபலிக்கும் வகையில் புசலுக்கு இவ்வாண்டில் ரூ. 2.50 சதத்தாலும் ரூ. 5 ஆலும் இரண்டுமுறை அதிகரிக்கப்பட்டு ரூ. 57·50 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் துணை உணவுப்பயிர்களை உள்ளடக்கு வதற்கு கீழ்மட்ட விலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அத்தகைய பயிர்களின் உற்பத்தியைப் பாதிக்கும் மாவின் விலை மேல் நோக்கிச் சீராக்கப்பட்டது. இழப்புகளை தொடர்ந்தும் ஏற்படுத்தும் கூட்டுத்தாபனங்கள் அவற்றின் செயலாற்றத்தைத் தூண்டுவதன்பொருட்டு வரவு செலவுத் திட்டத்தில் அவற்றிற்கான கொடுப்பனவுகள் கணிசமாகக் குறைக்கப்பட்டன. ஊதியத்திற்குத் தகுந்த உற்பத்தியாளர் இலாபங்களை உறுதிப்படுத்துகின்ற வேளை யில் இதே கணிப்பில் நுகர்வோருக்கான நியாயவிலையையும் உறுதிப்படுத்துகின்ற தேவை கூடின. ஒரு தாராளமாக்கப்பட்ட பொருளாதாரத்தை நடைமுறைப் படுத்தும் பொழுது இவை எதிர்பார்க்கப்படுகின்ற மிகக்கடினமான பிரச்சினைகளாக இருக்கின்றன. இக்கொள்கை வழிமுறைகளில் பெரும்பாலானவை நுகர்வோர் செலவில் உற்பத்தியாளர் இலாபங்களை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண் டதுடன் அரசின் வருமானத்தில் கணிசமான தியாகங்களை அடிக்கடி சுமத்துகின்ற கடினமான தீர்மானங்களைக்கொண்டனவாகவும் இருந்தன.

நாட்டின் கவனத்திற்குரிய முக்கிய கொள்கைகளில் ஒன்றாக வலுக்கொள்கை தொடர்ந்திருந்தது. மசகெண்ணெய், பெற்றோலிய உற்பத்திகளுக்கான விரை வாக அதிகரித்துச்செல்லும் இறக்குமதிச் செலவுகள் கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் நிலவுகின்ற மாபெரும் வர்த்தகப் பற்றாக்குறைக்கு தமது பங்கைச் செலுத்தின. 1981இன் மொத்தப் பெற்றோலியச் செலவு மொத்த இறக்குமதிச் செலவில் ஏறத்தாழ 25 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் மொத்த ஏற்றுமதி வருவாயில் 42 சதவீதத்தையும் ஈர்த்துக்கொண்டது. மகாவலி நிகழ்ச்சித்திட் டத்தின் நீர் மின்வலு செயற்றிட்டம் ஒழுங்குபெறும் வரையில் உயர்ந்த எரி பொருள் நுகர்வின் மூலமான வாயு மின்விசையாழியின் மூலமான மின் வழங் கலின் உதவி அவசியமானமையினால் பெற்றோலியம் பெற்றோலிய உற்பத்தி இறக்குமதிகள் அண்மைய எதிர் காலத்தில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது. மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பினும் இறக்குமதியின் ஒரு விடயத் தின் மீது இலங்கை தொடர்ந்தும் இந்தளவிற்கு மூலவளங்களைச் சிதறடிப்பது நினைத்துப்பார்க்கக்கூட முடியாத காரியமாகவுள்ளது. உயர்வான ஒரு முன்னுரி மை விடயமாகக் கருதி தேசிய வலுப் பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கு வதில் தவிர்க்க முடியாத சூழ்நிலையின் காரணமாக அவசர கவனம் செலுத்தப் பட்டது. குறுங்காலத்தில் வலுவான கேள்வி முகாமைக்கொள்கை திட்டமிடப் பட்ட வழங்கல் விரிவாக்க உபாயங்களுடன் இணைந்து நீண்டகாலத்தில் வலு விற்கு மாற்றீடான மூலங்களைக் கண்டுபிடிப்பது மிக இன்றியமையாததாகும்.

சந்தைக் காரணிகளால் பெருமளவு வழிநடத்தப்பட்டதன் மூலம் கட்டுப்பாடான பொருளாதாரத்திலிருந்துகட்டற்ற பொருளாதாரத்திற்குப் பெயர்ந்தமை சீராக் கத்தில்பெரும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. கட்டுப்படுத்தப்பட்ட பொருளா தார நடத்தையைப் பண்பாகக் கொண்ட முன்னைய பொருளாதார அமைப்பின் எச்சசொச்சங்கள் மூலவள ஒதுக்கில் தொடர்ந்தும் விடாது ஒழுக்கற்றதன்மைகளை

உருவாக்குகின்றன. 1981இல் இப்பொருளாதாரம் இத்தகைய சீராக்கங்களினால் உண்மையில் தளர்ச்சியையும் அமுக்கத்தையும் உணர்திருந்தவேளையில் பன்னாட்டுப் பணவீக்கம், பாதகமான வர்த்தக மாற்று வீதங்களால் இது மேலும் வலுவடைந்து காணப்பட்டது. இந்த நிலையிலும் கூட 1981இல் இலங்கைப் பொருளாதாரத்தின் முழுமையான பொருளாதார செயலாற்றம் 1980ஆம் ஆண்டினைவிடக் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியது எனக்குறிப்பிடமுடியும்.

## மொத்தத் தேசிய உற்பத்தி, வருமானம், செலவு

1981 இல் இலங்கைப் பொருளாதாரத்தின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. 1970 இன் நிலையான விலைகளில் அளவிடும் பொழுது மொஉஉ 1980 இன் ரூ. 195,750 இலட்சத்திலிருந்து 1981 இல் ரூ. 207,060 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் நிலையான விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 1981 இல் 4.2 சதவீதமாகும். இது 1980 இன் 5.6 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. 1981 இன் மொஉஉ உடனும் 1980 இன் மொதேஉ உடனும் ஒப்பிடுகையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட குறைந்த அளவிலான வளர்ச்சி விகிதத்திற்குக்காரணம் வெளிநாட்டிற்குச் செலுத்தப்பட்ட தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பேயாகும். 1980 இன் வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் (1970 இன் நிலையான விலைகளில்) ரூ.1, 190 இலட்சங்கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலிலிருந்து 1981 இல் மூன்று மடங்குக்கு மேலாக ரூ. 4,380 இலட்சம் தேறிய வெளிப்பாய்ச்சல் தொகையாக அமைந்தது. இது வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான குறைந்த மட்டத்திலான வட்டியினதும் வெளிநாட்டுக்கடன்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு வட்டிக்கொடுப்பனவுகள், வெளிநாட்டு முதலீடுகளிலிருந்தான வட்டி, பங்கிலாபக்கொடுப்பனவுகள் ஆகியன இருமடங்கிற்கு மேலாக அதிகரித்ததினதும் ஒன்றிணைந்த விளைவாக ஏற்பட்டதாகும். தேறிய வெளிக்கொடுப்பனவுகள் 1981 இல் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை 1.6 சதவீதத்தால் குறைவடையச் செய்தன.

1981 இல் நடைமுறைக் காரணிச்செலவு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 26 .1 சதவீத வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. 1980 இல் ரூ. 622,460 இலட்சமாக இருந்த மொஉஉ இன் பெறுமதி 1981 இல் ரூ. 785,060 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1980 இல் ரூ. 4,320 இலட்சம் கொண்ட எதிர்க்கணியத் தொகையாக அமைந்த வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானத்திற்கெதிராக 1981 இல் ரூ. 16,750 இலட்சம் கொண்ட எதிர்க்கணியத் தொகையாக அமைந்த தேறிய காரணி வருமானத்தைக் கணிப்பில் எடுத்துச் சீராக்கம் செய்கையில் 1981 இல் நடைமுறைக்காரணிச் செலவு விலைகளிலான மொதேஉ 24.3 சதவீதத்தால் அதிகரித்தது. உள்ளடக்க மொத்த தேசிய உற்பத்தி விலைச்சுருக்கி 1981 இன் விலைகளில் 19 சதவீதம் கொண்ட பொதுவான அதிகரிப்பைக் காட்டியது,

1981 இல் குடித்தொகை 1.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட குடித்தொகை அதிகரிப்பிற்கு இடமளித்து நோக்கின் உண்மையான தலைக்குரிய வருமானம் 2.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நடைமுறை விலைகளிலான தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி ரூ. 5,126 அல்லது 265 ஐ. அ. டொலராகும்.

1981 இல் முதன்மையான வளர்ச்சியினைக் கொண்ட துறைகளாக வேளாண்மையும் தயாரிப்பும் விளங்கின. முந்திய சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரத்தின் அபிவிருத்தி அமைப்பில் இது குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும். வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்தொழில் என்பன 1981 இல் 6.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. தயாரிப்பும் சுரங்கமும், பயன்படு பணிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்ததுறையின் முந்திய ஆண்டின் குறைந்த வளர்ச்சி வீதமான 2 1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் என்பவை முந்திய சில ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1981 இல் குறைந்த வளர்ச்சி வீதமான 6·3 சதவீதத்தைக் கொண்டிருந்தன. 1978,1979 இல் செயற்றிறன் மிக்கதாக விளங்கிய கட்டட ஆக்கத்துறை 1980 இல் மித வளர்ச்சி வீதமான 11 சதவீதத்தினைப் பதிவுசெய்தபின் 1981 இல் சிறிதளவால் வீழ்ச்சி அடைந்தது.